சுற்றறிக்கை இல. 06/2003,

(17)

எனது இல.வகிமா/கூ.மு/எம்/02,
கூட்டுறவு அபிவிருத்தித்திணைக்களம்,
திருகோணமலை.
10.07.2003.

(138)

(40)

சகல கூ.அ.உ.ஆணையாளர்கள்/
அதிபர், மாகாணக்கூட்டுறவு பயிற்சி நிறுவனம்.

**<u>உறுப்பினர் சேர்த்தல்</u>**

இலங்கைக் கூட்டுறவு இயக்கத்தில் குறிப்பாக வடகிழக்கு மாகாணக் கூட்டுறவு இயக்கத்தில் கடந்த கால் நூற்றாண்டுக்கு மேல் ஒருமந்த நிலையும், செயற்பாடுகளில் பாரிய பின்னடைவுகளும் காணப்படுகின்றன.

எனினும் வடகிழக்கு பிரதேசங்களின் அடிப்படையான வாழ்க்கைக்குதவுகின்ற முயற்சிகள் கூட்டுறவு அமைப்புகளுக்கூடாக முன்னெடுத்து பாராட்டத்தக்க வெற்றிகள் முன்னர் எட்டப்பட்டிருந்தன.

தற்போது இத்தகைய கூட்டுறவு முயற்சிகள் தாம வகித்த பங்கினை இழந்து உறுப்பினரது நம்பிக்கையையும், பெருமளவில் இழந்துள்ளன.

சர்வதேச ரீதியில் உலகமயமாதல், பல்தேசிய நிறுவனங்களின் மேலாண்மை என்பவற்றால் எழுந்துள்ள பக்கவிளைவுகளை சமூக அக்கறை கொண்ட கூட்டுறவு நிறுவன பொருளியல் முயற்சிகளால் மட்டுமே நிவர்த்திக்க முடியுமென ஏற்கப்பட்டுள்ளது.

எமது பிரதேசங்களிலும் உறுப்பினர்களது வாழ்க்கைத்தர அபிவிருத்திக்கு கூட்டுறவு இயக்கத்தின் பங்கு இன்னமும் தனியானதொரு அங்கீகாரத்தைக் கொண்டுள்ளமை மறுக்க முடியாதது.

ஆயின் உறுப்பினர்களின் பற்றுமிக்க சனநாயக நடைமுறைகளை மதித்தும், தீர்மானமியற்றலில் செல்வாக்குச் செலுத்தும் பங்குபற்றுதலும் இல்லாமல் கூட்டுறவு நிறுவனங்களை மீளவும் உயிர்ப்புள்ள நிறுவனங்களாக உருவாக்க முடியாது.

புதிய உறுப்பினர்களை இணைத்தும், ஆர்வமிழந்து விலகியிருக்கும் உறுப்பினர்களுக்கு ஊக்கமளித்தும் பலம்மிக்க உறுப்பினரால் வழிநடத்தப்படும் ஒரு நிறுவனமாக கூட்டுறவு இயக்கம் மாற்றியமைக்கப்படுதல் இன்றைய காலகட்டத்தில் ஒரு இன்றியமையாத முற்தேவையாக உணரப்படுகிறது.

2003ம் ஆண்டு கூட்டுறவுதின செய்தியாக இவ்வவசியத்தை வலியுறுத்தவும், இளையோர், மாதர் ஆகிய பிரிவினரின் அதிகரித்த அக்கறையையும், பங்கேற்றலையும் பெறத்தக்கதாக புதிய உறுப்பினர்களைச் சேர்க்கும் அடிப்படையில் வரும் யூலை மாதம் வடகிழக்கு கூட்டுறவு இயக்கத்தின் உறுப்பினர் சேர்க்கும் மாதமாக பிரகடனப்படுத்தப்படுகிறது.

இந்த நிகழ்வுத்திட்டம் வெற்றிபெறுவதற்கு எல்லாமட்டங்களிலும் இதற்கான அவசியத்தை உணர்ந்து உழைப்பதற்காக ஒன்றிணைந்த செயற்பாடு மிகவும் தேவையானதாகும். மாவட்டங்கள்தோறும் ஒரு குழு அமைக்கப்பட்டு அவர்களால் அவ்வவ்பிரதேச நிலைமைகளைக் கற்று பொருத்தமானமுறையில் உறுப்பினர்களை திரட்டும் நடவடிக்கை தீவிரமாக முன்னெடுக்கப்படல் வேண்டும். கூட்டுறவுக்கோட்பாடு, எமது முன்னைய தலைமுறையினர் இந்நிறுவனங்களுக்கூடாக அடைந்த பயன்கள், அவற்றை எவ்விதம் வெளி மாகாணங்களும், பிறநாடுகளும் உதாரணங்களாகப் பின்பற்றின என்ற வரலாற்றுப் பின்னணியுடன், சமூகநீதி, உறுப்பினரிடையே இறுக்கமான நல்லுறவு மூலம் சாதிக்கக்கூடிய பொருளியல், சமூகநலன்களை நன்கு வெளிப்படுத்தல் வேண்டும். வெகுசன ஊடகங்களினதும், சமூக அமைப்புகளினதும் உண்மையான ஈடுபாட்டைக் கவர்ந்து அவர்களைப் பங்காளிகளாக்குவதுடன் கூட்டுறவு இயக்கம் எந்தத் தனிமனிதனதும் அல்லது பிரிவினரதும் சொத்தல்லவென்பது, செயன்முறையில் காண்பிக்கப்படல் வேண்டும். ஊழலும், திறமையீனமுமற்ற நிறுவனமாக கூட்டுறவு இயக்கத்தை மாற்றும் பெரும் சவாலை இவ்விளைய தலைமுறையினரிடம் ஒப்படைக்கும் புனிதப்பணியாக இந்த உறுப்பினர் சேர்த்தலை தெளிவாக அடையாளப்படுத்தல் இதன் வெற்றிக்கு வழிகோலும்.

மாவட்டங்கள் தோறும் 15பேர் கொண்ட நடவடிக்கைக்குழு பின்வரும் அடிப்படையில் உடனடியாக அமைக்கப்படல் வேண்டும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | ப.நோ.கூ.சங்கப் பிரதிநிதிகள் | | – | 02 | |
| 2. | ப.தொ.வ.அ./கூ.சங்கப் பிரதிநிதிகள் | | – | 01 | |
| 3. | சி.க.கூ.சங்கப் பிரதிநிதிகள் | | – | 01 | |
| 4. | கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள் | | – | 01 | |
| 5. | கால்நடை வளர்ப்போர் கூ.ச. | " | – | 01 | |
| 6. | பாடசாலை கூ.ச. | " | – | 02 | (ஆசிரியர் ஒருவர்) |
| 7. | வெகுசன ஊடகப் | " | – | 02 | |
| 8. | அரசசார்பிலா நிறுவனப் | " | – | 01 | |
| 9. | மாவட்டக் கூட்டுறவுச்சபை | " | – | 01 | |
| 10. | கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்க | " | – | 01 | |
| 11. | கூட்டுறவுத் திணைக்களப் | " | – | 01 | |
| 12. | பிற அமைப்புகள் | " | – | 01 | |

இக்குழுவினது முதற்கூட்டத்தில் நிகழ்ச்சித் திட்டம் வரையப்பட்டு அதனைச் செயற்படுத்துவதற்கான பொறுப்புக்கள் பகிர்ந்தளிக்கப்படல் வேண்டும். அவசியப்படக்கூடிய வளங்களை மதிப்பிட்டு அதனைத் திரட்டும் வழிகளையும் முடிவு செய்வது விரைவானதும், வெற்றிகரமானதுமான நடவடிக்கைகளுக்கு வழிசெய்யும். அத்திட்டத்தினையும், பொறுப்புக்கள் பகிரப்பட்ட விபரத்தையும் 2003, ஜூலை 15ந் திகதிக்குள் எனக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். இந்நடவடிக்கைக்கு மிகுந்த முன்னுரிமை அளிப்பதுடன், அனைவரினதும் ஒத்துழைப்பைப் பெறுவதில் உறுதிசெய்யுமாறும் அறிவுறுத்த விரும்புகிறேன். இவை தொடர்பில் அவசியப்படக்கூடிய எல்லா ஆலோசனைகளும் என்னால் வழங்கப்படும்.

இ.இளங்கோவன்
கூ.அ.ஆணையாளரும்
கூ.ச.பதிவாளரும் (வகிமா)

பிரதிகள் :
1. தலைவர், சகல ப.நோ.கூ.சங்கம்
2. தலைவர், சகல ப.தெ.வ.அ.கூ.சங்கம்
3. தலைவர், கடற்றொழிலாளர் கூ.சங்கம்
4. தலைவர், மாவட்ட சி.க.கூ.ச.சமாசம்
5. தலைவர், கால்நடைவளர்ப்போர் கூ.சங்கம்
6. தலைவர், மாவட்ட கூட்டுறவுச் சபை
7. வலயக் கல்விப் பணிப்பாளர்கள், கல்வித் திணைக்களம்

– தகவலுக்கும், ஒத்துழைப்புக்குமாக